ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,891 — 1962 පෙබරවාරි 2 වැනි සිකුරාදා — 2.2.1962

12,891 ம் இலக்கம் — 1962 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 31 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானுவித அறிவித்தல்கள் .. | — |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டம்

அறிவித்தல்

அச்சடிப்புத் தொழிற் சம்பளச்சபையில் முதலாளிகளின் பிரதிநிதியாக இருந்த ஜீ. ஈ. செயிலர் தாமாக விலகியதால், அவருக்குப்பதிலாக அங்கம் வகிக்க திரு. வ. இராமநாதன் என்பவரை, (136 ம் அத்தியாய மாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசீயமய சேவைகள் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளா ரென, 1943 ம் ஆண்டின் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சா. ப. குமாரசிங்க,<br>தொழில் தேசீயமய சேவைகள் மந்திரி<br>காரியாலய மேலதிக நிரந்தரக்காரியதரிசி.

கொழும்பு,<br>1962 ம் ஞு ஜனவரி மீ 16 ந் வ.

2–18.

---

### சம்பளச் சபைச் சட்டம்

தீப்பெட்டி உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையில் 1961 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 8 ந் திகதி தொடக்கம் மூன்று ஆண்டு காலத்திற்கு அங்கம் வகிக்க பின்வரும் பேர்வழிகளை (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைச் சட்டத்தின் 9 ம் பிரிவின் பிரகாரம், கனம் தொழில் தேசீயமய மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளாரென்று 1943 ம் ஆண்டுச் சம்பளத்தீர்ப்புச் சங்கவிதிகளின் 26 ம் விதியின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சா. ப. குமாரசிங்க,<br>தொழில் தேசீயமய மந்திரி காரியாலய<br>மேலதிக நிரந்தரக் காரியதரிசி.

கொழும்பு,<br>1962 ம் ஞு சனவரி மீ 16 ந் வ.

நியமன அங்கத்தவர்கள் :

திரு. எஸ். பி. சூயட்டவர<br>திருமதி ஆர். எஸ். ரீ. எல். பி. தெரனியகல<br>திரு. ஜே. ஈ. ஆர். என்ஸ்மன்

முதலாளிகளின் பிரதிநிதிகள் :

திரு. எச். ஈ. பி. டி மெல்<br>திரு. ரீ. சிவப்பிரகாசம்<br>திரு. எம். எச். ஆர். அஸ்றபெரி<br>திரு. பீ. ஆல்ஸ்றேம்

தொழிலாளரின் பிரதிநிதிகள் :

திரு. பிறின்ஸ் ராஜ சூரிய<br>திரு. கே. டி. ஜினதாச<br>திரு. எம். ஜி. மெண்டிஸ்<br>திரு. எச். டி. கருணாரத்ன

2–23.

---

**வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப் படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.**

**வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.**

## மன்னார் மீன்பிடித் தகராறு

மேற்கூறிய தகராறையிட்டு விசாரணை நடாத்திய திரு. டபிள்யு. ஜே. எ. வான் லன்கன்வேர்க் அவர்கள் அறிக்கை கொழும்பு கால்பேசு மீன்பிடி ஆராய்ச்சி நிலயத்தில் 1962 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ம் திகதி மு. ப. 10 மணிக்கு வாசிக்கப்படுமென்பதை இத்தகராறுடன் சம்பந்தப் பட்ட கட்சியினர்களுக்கும் அதில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கொழும்பு,
கடற்றொழிற் பகுதி,
1962 ம் ஞு ஜனவரி மீ 29 ந வ.

டீ. ரி. ஈ. எ. டீ. பொன்செக்கா,
கடற்றொழில் அதிபர்.

2–226.

## விளம்பரம்

*1962 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 5 ந் திகதி திங்கட்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால், 1962 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 9 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1962 ம் ஆண்டு மாசி (பெப்ருவரி) மாதம் 3 ந் திகதி சனிக்கிழமை பி. ப. 12.30 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*பேர்னுட் த சில்வா,*
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு.*
*1962 ம் ஞு மாசி (பெப்ருவரி) மீ 2 ந் வ.*

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கஸெற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப் பாளாராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப் படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக் கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மனி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

6. " நகலை " கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல் பிழை களையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி ... ... | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... ... | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல் களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் :

அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)

| | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 22 | 50 | ... | 35 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 12 | 50 | ... | 18 | 0 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் ... ... ... | 20 | 0 | ... | 28 | 0 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியது மான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... | 25 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... | 50 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 10 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 20 | | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற் கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.